தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)

ஆணை எண்.213/பேரூ/2021

நாள் 07.12.2021

திரு. ஜான் ஸ்டீபன்,
பூவன்கோடு, கன்னியாகுமரி மாவட்டம் ... முறையீட்டு மனுதாரர்

திரு. தை. சத்தியதாஸ்
முன்னாள் செயல் அலுவலர்,
வேர்கிளம்பி பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம் ... எதிர்மனுதாரர்

கன்னியாகுமரி மாவட்டம், செங்கோடி அஞ்சல், பூவன்கோடு, 13–65 துத்திக்காலவிளை என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜான்ஸ்டீபன் என்பவரின் 12.12.2019 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.12.2019ல் பெறப்பட்டு, 213/2019என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், செங்கோடி அஞ்சல், பூவன்கோடு, 13–65 துத்திக்காலவிளை என்ற முகவரியில் வசிக்கும் திரு. ஜான்ஸ்டீபன் என்பவர் தமது 12.12.2019 நாளிட்ட புகார் மனுவில், கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. தை. சத்தியதாஸ் என்பவர் வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் கட்டிட வரைபட அனுமதி அளிக்கப்பட்டதில் முறைகேடு செய்திருப்பது விலவூர் பேரூராட்சி செயல் அலுவலரின் விசாரணை அறிக்கை எண்.அ1/36/2015 நாள் 05.03.2015 மற்றும் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ ஆணை எண்.044/2017 நாள் 27.3.2017ன் மூலம் தெரியவருகிறது என்றும், மேலும், புகார் தெரிவிக்கப்பட்ட ஒரு வீட்டினை ஆய்வு செய்ததில், அரசுக்கும், பேரூராட்சிக்கும்

வரைபட கட்டணமாக ரூ.5,820/—ம், கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மூன்று ஆண்டு நிலுவைக்கட்டணம் ரூ.1,596/—ம் இழப்பீடு ஏற்பட்டுள்ளது என கண்டறியப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார். எனவே, வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. தை. சத்தியதாஸ் என்பவர் வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலகட்டத்தில் கட்டிட வரைபட அனுமதி வழங்கிய 916 கட்டிடங்களையும் ஒரு சிறப்புக் குழு அமைத்து, மறு அளவீடு செய்து, அரசுக்கும் பேரூராட்சிக்கும் ஏற்படுத்தியுள்ள இழப்புகளை சரிசெய்யுமாறும், இழப்பீட்டிற்குக் காரணமான திரு. தை. சத்தியதாஸ், முன்னாள் வேர்கிளம்பி செயல் அலுவலர் மீது உரிய விசாரணை மேற்கொண்டு துறைரீதியான நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

2. கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் மற்றும் முறையீட்டு மனுதாரர் ஆகியோர் 28.07.2021 அன்றைய நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர். முறையீட்டு மனுதாரர் மற்றும் வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் மேற்படி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்துள்னர்:-

மனுதாரர் திரு. ஜான் ஸ்டீபன் 28.7.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள தமது வாக்குமூலத்தில் "கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. சத்தியதாஸ் என்பவர் வேர்கிளம்பி பேரூராட்சியில் போலியான கட்டிட வரைபடத்திற்கு அனுமதி அளித்துள்ளதால், அவர் அனுமதி அளித்துள்ள 916 கட்டிடங்களை மறு அளவீடு செய்யுமாறு இம்முறைமன்றத்தில் 12.12.2019 அன்று மனு அளித்திருந்தேன். தற்போது தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பேரூராட்சியிலிருந்து பெறப்பட்ட தகவலின்படி அப்பேரூராட்சியில் அமைந்துள்ள 519 கட்டிடங்களையும் மறு அளவீடு செய்தால் அப்பேரூராட்சிக்கு வருமானம் கிடைக்கும் என்றும், நிதியிழப்பீட்டையும் தவிர்க்கலாம் எனவும் இம்மன்றத்தின் முன் எனது வாக்குமூலமாக பதிவு செய்கிறேன். மேலும், எனது 12.12.2019 நாளிட்ட இம்முறைமன்றத்திற்கு அளித்துள்ள முறையீட்டு மனுவில் கண்டுள்ள விவரங்களையே எனது வாக்குமூலமாக இம்முறைமன்றத்தின் முன் பதிவு செய்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

3. வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. தை. சத்தியதாஸ் 28.7.2021 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் "வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் அப்பேரூராட்சியில் மனுதாரர் தெரிவித்துள்ள கட்டிடங்களை சரிவர அளந்து, உரிய வரிவிதிப்பு செய்யப்பட்டது என்றும், இதனால் மேற்கண்ட பேரூராட்சிக்கு எவ்வித இழப்பீடும் ஏற்படவில்லை என்பதை இம்முறைமன்றத்தின் முன்பு பதிவு செய்கிறேன். மேலும், மேற்கண்ட கட்டிடங்களை மறு அளவீடு செய்வதற்கு எனக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்பதையும் இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

4. மனுதாரரின் புகார் மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து பேரூராட்சியின் ஆவணங்களின் அடிப்படையில் ஆய்வு செய்து, திரு. தை. சத்தியதாஸ், வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் போலியான வரைபடங்களுக்கு அனுமதி அளித்துள்ளாரா என்பதை உறுதி செய்து, அதன் மீது விரிவான விளக்க அறிக்கையினை அனுப்பிவைக்குமாறு வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

5. வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலரிடமிருந்து பெறப்பட்டுள்ள 27.9.2021 நாளிட்ட அறிக்கையில் திரு. தை. சத்தியதாஸ், செயல் அலுவலராக வேர்கிளம்பி பேரூராட்சியில் 12.12.2011 முதல் 31.12.2014 வரை பணிபுரிந்துள்ளார். அன்னார் பணியாற்றிய காலத்தில் கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்ட வரைபடங்கள், விண்ணப்ப பதிவேடு, வரைபட அனுமதி பதிவேடு மற்றும் கட்டணங்கள் வசூலித்த விவரங்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேற்படி ஆய்வில், கட்டிட வரைபட அனுமதி கோரி வரப்பெற்ற விண்ணப்பங்களில் தகுதியான அனைத்து விண்ணப்பங்களுக்கும் வரைபட அனுமதிக்குரிய கட்டணங்கள் வசூலித்து, பேரூராட்சி கணக்கில் வரவாக்கப்பட்ட பின்னர், கட்டிட வரைபட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. போலியான வரைபட அனுமதி ஏதும் கண்டறியப்படவில்லை. அன்னார் வேர்கிளம்பி பேரூராட்சியில் பணியாற்றிய காலத்தில் வழங்கிய கட்டிட வரைபட அனுமதிகள், கட்டிடம் கட்டி முடித்து வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்கள் ஆகியவற்றை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையினரால் தணிக்கை செய்யப்பட்டு, குறைபாடுகள் ஏதும் சுட்டிக்காட்டப்படவில்லை. திரு. ஜான் ஸ்டீபன் தனது புகார் மனுவில் ஒரு வீட்டினை ஆய்வு செய்ததில் அரசுக்கு வரைபட கட்டணமாகவும், வரிவிதிப்பு கட்டணமாகவும் இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது அவரது உடன்பிறந்த சகோதரர் திரு. ஏ. செல்வின் ஜோசப் என்பவரின் வீடாகும். சகோதரர்களிடையே ஏற்பட்ட சொத்து பிரச்சனை தொடர்பாக O.S No.96/2013 வழக்கு தொடரப்பட்டது. மேற்படி வழக்கு விவரம் மனுதாரரின் சகோதரர் திரு. A. செல்வின் ஜோசப் என்பவரின் வீடு கட்டி முடித்து வரிவிதிப்பும் செய்யப்பட்ட பின்பு பேரூராட்சி அலுவலகத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. வழக்கு விவரம் தெரிவித்த பின்னர், திரு. A. செல்வின் ஜோசப் என்பவருக்கு எவ்வித அனுமதியும் வழங்கப்படவில்லை. வரிவிதிப்பு செய்யப்பட்ட பின்பு அன்னார் கட்டிய கூடுதல் கட்டுமானம் குறித்து களப்பணியாளரான வரிவசூலர் பேரூராட்சிக்கு அறிக்கை ஏதும் சமர்ப்பித்ததற்கான விவரம் ஏதும் இல்லை. திரு. ஜான் ஸ்டீபன் என்பவரின் புகார் தொடர்பாக தமிழ்நாடு உள்ளாட்சி முறைமன்ற நடுவம் மேற்படி கட்டிடத்தினை ஆய்வுசெய்து அறிக்கை தாக்கல் செய்ய செயல் அலுவலருக்கு உத்தரவிட்டதன்படி மேற்படி கட்டிடத்திற்குள் பிரவேசிக்கவும், மறு அளவீடு செய்யவும், கட்டிடத்தின் உரிமையாளர் அனுமதித்ததன் பின்னர், செயல் அலுவலரால் மறு அளவீடு செய்யப்பட்டதாகவும், அதற்குப் பின்னர் கூடுதல் கட்டுமானத்திற்கான தொகை அபராதத்துடன் வசூலித்து முறைப்படுத்தப்பட்டதாகவும் பேரூராட்சியில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளது. இதுபோன்ற புகார்கள் மற்றும் வழக்குகள் திரு. தை. சத்தியதாஸ் செயல் அலுவலர் வழங்கிய இதர கட்டிட வரைபட அனுமதிகளில் இதுநாள் வரையிலும் வரப்பெறவில்லை. வடைபட அனுமதிக்கு மாறுதலாகவும், கூடுதல் அளவு கட்டப்படுவதாகவும் வரிவசூலர்கள் அறிக்கை ஏதும் சமர்ப்பிக்கவில்லை. இதனால்

போலியான கட்டிட அனுமதி ஏதும் இல்லை என்று வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

6. மேலும், பேரூராட்சிகள் இயக்குநர் சென்னை கடித ந.க.எண்.2068/2016/இ5 நாள் 31.7.2017 மற்றும் பேரூராட்சிகள் உதவி இயக்குநர் நாகர்கோவில் கடித எண்.ந.க.எண்.4062/2/17/u8 நாள் 4.10.2017–ன்படி ஒவ்வொரு பேரூராட்சியிலும் un Assessed and under Assed கட்டிடங்கள், வரிவிதிக்கப்படாத மற்றும் குறைந்த வரிவிதிப்பு செய்த கட்டிடங்களை முழு அளவீடு செய்து குறைவாக வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்கள், அனுமதியற்ற கட்டிடங்கள், வரைபட அனுமதி பெறாத கட்டிடங்கள் ஆகியவற்றின் அறிக்கை தயார் செய்து, அதன்படி அந்தந்த பேரூராட்சிகள் வரி சீரமைப்பு செய்ய உத்தரவிடப்பட்டது. அதன்படி வேர்கிளம்பி பேரூராட்சியில் ஒதுக்கீடு செய்யப்பட்ட திருத்தியமைக்கப்பட்ட கணக்கெடுப்பு குழுக்கள் எண்.37, 38, 39, 40, 41, 43 மற்றும் 44 பணியாளர்கள் வேர்கிளம்பி பேரூராட்சியிலுள்ள அனைத்து கட்டிடங்களையும் தல ஆய்வு மேற்கொண்டு, அளவீடு செய்து, குறைவாக வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்கள், அனுமதியற்ற கட்டிடங்கள், வரைபட அனுமதி பெறாத கட்டிடங்கள் ஆகியவற்றின் பட்டியல் வேர்கிளம்பி பேரூராட்சிக்கு வழங்கப்பட்டதன் அடிப்படையில், அப்போதைய நிர்வாகத்தால் வரி திருத்தியமைக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட மாற்றுப் பணியில் வந்த களப்பணியாளர்கள் மறு அளவீடு செய்த கட்டிடங்களில், திரு. தை. சத்தியதாஸ், செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் அனுமதி வழங்கிய கட்டிட வரைபடங்கள் மற்றும் வரிவிதிப்புகளில் குறைவாக கட்டிட வரைபட அனுமதி தொகை வசூலிக்கப்பட்டதாகவோ, குறைவாக வரி விதிக்கப்பட்டதாகவோ அலுவலக ஆவணங்கள் மற்றும் பதிவேடுகளின்படி இல்லையென்றும் வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். எனவே, திரு. தை. சத்தியதாஸ், வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணியாற்றியபோது வழங்கப்பட்ட கட்டிட வரைபட அனுமதிகள் மற்றும் வரிவிதிப்புகளை மறு அளவீடு செய்தபோதிலும் குறைபாடுகள் ஏதும் சுட்டிக்காட்டப்படவில்லை. எனவே, திரு. தை. சத்தியதாஸ் செயல் அலுவலராக வேர்கிளம்பி பேரூராட்சியில் பணிபுரிந்த காலக்கட்டத்தில் போலியான வரைபட அனுமதி ஏதும் வழங்கப்படவில்லை எனவும், அரசுக்கும் பேரூராட்சிக்கும் எவ்வித இழப்புகளும் ஏற்படவில்லை என்றும் வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி செயல் அலுவலர் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

7. முறையீட்டு மனுதாரரின் மனு, அவரது வாக்குமூலம், முன்னாள் செயல் அலுவலர், வேர்கிளம்பி பேரூராட்சி அவர்களது வாக்குமூலம் மற்றும் வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சியின் தற்போதைய செயல் அலுவலர் அளித்துள்ள அறிக்கை மற்றும் ஆவணங்கள் ஆகிய அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்க்கண்டவை இம்முறைமன்ற நடுவத்தால் கண்டறியப்பட்டன:-

❖ முறையீட்டு மனுதாரர் அளித்துள்ள வாக்குமூலத்தில் வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. சத்தியதாஸ் வேர்கிளம்பி பேரூராட்சியில் போலியான கட்டிட வரைபடத்திற்கு அனுமதி அளித்துள்ளதால், அவர் அனுமதி

அளித்துள்ள 916 கட்டிடங்களை மறு அளவீடு செய்யுமாறு தமது 12.12.2019 நாளிட்ட புகார் மனுவில் கோரியிருந்த நிலையில், தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் பேரூராட்சியிலிருந்து பெறப்பட்ட தகவலின்படி அப்பேரூராட்சியில் அமைந்துள்ள 519 கட்டிடங்களையும் மறு அளவீடு செய்தால் பேரூராட்சிக்கு வருமானம் கிடைக்கும் என்றும், நிதியிழப்பீட்டையும் தவிர்க்கலாம் என்று தெரிவித்துள்ளார்.

❖ வேர்கிளம்பி பேரூராட்சி முன்னாள் செயல் அலுவலர் திரு. தை. சத்தியதாஸ் 28.7.2021 அன்றைய இம்முறைமன்ற நடுவ நேரடி விசாரணையில் ஆஜராகி அளித்துள்ள வாக்குமூலத்தில் மேற்கண்ட கட்டிடங்களை மறு அளவீடு செய்வதற்கு தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

❖ மனுதாரர் திரு. A. ஜான் ஸ்டீபன் தனக்கும், தனது சகோதரர் திரு. A. செல்வின் ஜோசப் என்பவருக்குமிடையேயான சொத்து பிரச்சனையில், திரு. தை. சத்தியதாஸ், வேர்கிளம்பி பேரூராட்சியின் அப்போதைய செயல் அலுவவர், போலியான வரைபடத்திற்கு அனுமதி அளித்துள்ளார் என அளித்த புகார் மனு மீது உரிய விசாரணை மேற்கொண்டு 27.03.2017ல் இம்முறைமன்ற நடுவத்தினால் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் வேர்கிளம்பி பேரூராட்சி செயல் அலுவலரின் செயல்முறைகள் எண்.146/2012–13 நாள் 26.12.2012ல் தரைதளத்தல் 60.46 சதுர மீட்டரும், முதல் தளத்தில் 35.24 சதுர மீட்டரும் வீடுகட்ட திரு. செல்வின் ஜோசப் அனுமதி பெற்றுவிட்டு, தரைதளத்தில் 62.40 சதுர மீட்டரிலும், முதல் தளத்தில் 62.40 சதுர மீட்டரில் கட்டிடமும் கட்டியதால், பேரூராட்சியின் அனுமதியின்றி தரைதளம் மற்றும் முதல் தளம் சேர்த்து மொத்தம் 29.10 சதுர மீட்டர், அனுமதி பெற்ற வரைபடத்தைவிட, கூடுதலாக கட்டிடம் கட்டியதால், பேரூராட்சிக்கு நிதி இழப்பு ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டு, திரு. செல்வின் ஜோசப் பேரூராட்சியின் அனுமதியில்லாமல் கட்டிய கூடுதல் கட்டிடத்திற்கு விதிகளின்படி உடனடியாக தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டுமென இம்முறைமன்ற நடுவத்தினால் ஆணையிடப்பட்டது.

❖ இம்முறைமன்ற ஆணையினைத் தொடர்ந்து, நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநரை தல ஆய்வு மேற்கொண்டு, பேரூராட்சி ஆவணங்களை சரிபார்த்து, ஆய்வறிக்கை சமர்ப்பிக்குமாறும் ஆணையிடப்பட்டதைத் தொடர்ந்து, 6.7.2018ல் நாகர்கோவில் மண்டல பேரூராட்சிகளன் உதவி இயக்குநரால் தல ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அளிக்கப்பட்ட அறிக்கையில், திரு. A. செல்வின் ஜோசப் என்பவரால் கூடுதலாக கட்டப்பட்ட 29.10 சதுர மீட்டர் கட்டிடத்திற்கு கூடுதல் வரைபட அனுமதி ஆணை எண்.23/2017–2018 நாள் 24.5.2017ன்படி அனுமதி வழங்கப்பட்டு, கூடுதல் கட்டிடத்திற்கான கட்டிட வரைபட அனுமதி கட்டணமாக ரூ.5,820/–ம் (ரூபாய் ஐயாயிரத்து எண்ணூற்று இருபது மட்டும்), கூடுதலாக கட்டப்பட்ட கட்டிடத்திற்கு மூன்று ஆண்டு நிலுவைக் கட்டணமாக ரூ.1,596/–ம் (ரூபாய் ஆயிரத்து ஐநூற்று தொன்னூற்று ஆறு மட்டும்) வசூலிக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் கட்டிட அனுமதிக்கு மாறாக கட்டிடம் கட்டியதை செயல் அலுவலர் கண்காணிக்கத்

தவறியுள்ளார் என்றும் பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தமது ஆய்வறிக்கையில் தெரிவித்திருந்தார். திரு. செல்வின் ஜோசப் என்பவர் கட்டிட வரைபட அனுமதியினைவிட கூடுதலாக கட்டியுள்ள கட்டிடம் குறித்து பேரூராட்சி செயல் அலுவலர் நடவடிக்கை எடுக்கத் தவறியதால், அவர் மீது துறை ரீதியான நடவடிக்கை மேற்கொள்ள பேரூராட்சிகளின் இயக்குநருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவத்தினால் 1.10.2018ல் ஆணையிடப்பட்டது.

❖ மேற்குறிப்பிடப்பட்டுள்ள காரணங்களின் அடிப்படையிலும், மனுதாரர் தற்போது அளித்துள்ள 12.12.2019 நாளிட்ட புகார் மனுவினையும் பாரபட்சமின்றி, நடுநிலையோடு இம்முறைமன்ற நடுவம் ஆய்வுசெய்தது. திரு. தை. சத்தியதாஸ், வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் அனுமதி அளித்துள்ள 519 கட்டிடங்களை மறு அளவீடு செய்தால் பேரூராட்சிக்கு வருமானம் கிடைக்குமென்றும், பேரூராட்சிக்கு ஏற்பட்டுள்ள நிதியிழப்பினைத் தவிர்க்கலாமென்றும் மனுதாரர் தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளதன் அடிப்படையிலும், திரு. தை. சத்தியதாஸ், வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் தம்மால் சரிவர அளந்து வரிவிதிப்பு செய்யப்பட்ட கட்டிடங்களை மறு அளவீடு செய்வதற்கு தமக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லை என்று தமது 28.7.2021 நாளிட்ட வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

8. மேற்கண்ட சூழ்நிலையில், திரு. தை. சத்தியதாஸ், வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் அவரால் அனுமதி அளிக்கப்பட்ட கட்டிடங்களை, அப்பேரூராட்சி அலுவலக ஆவணங்களின் அடிப்படையில் கண்டறிந்து, அவற்றில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான கட்டிடங்களை, அதாவது அவரால் அனுமதிக்கப்பட்ட கட்டிடங்களில் 10 சதவீதத்திற்குக் குறையாத (வணிகம், குடியிருப்பு, RCC போன்ற வகைகள் ஒவ்வொன்றிலும்) கட்டிடங்களை பட்டியலிட்டு, அதன் அடிப்படையில் அவற்றை மறு அளவீடு செய்ய (Random basis resurvey) தொழில்நுட்ப வல்லுநர் (Technical Committee) குழு ஒன்றை அமைத்து தொடர் நடவடிக்கையினை மேற்கொள்ள பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. மேலும், அக்குழு கன்னியாகுமரி மாவட்டம், வேர்கிளம்பி பேரூராட்சியின் ஆவணங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொண்டு, தல ஆய்வு செய்து, மறு அளவீடு செய்து அளிக்கும் அறிக்கையின் அடிப்படையில், திரு. தை. சத்தியதாஸ், வேர்கிளம்பி பேரூராட்சியில் செயல் அலுவலராக பணிபுரிந்த காலத்தில் அவரால் அனுமதி அளிக்கப்பட்ட வரைபடங்களில்/கட்டிடங்களில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது கண்டறியப்பட்டால், அதன் அடிப்படையில் உரிய விதிமுறைகளுக்குட்பட்டு திரு. தை. சத்தியதாஸ், வேர்கிளம்பி பேரூராட்சியின் முன்னாள் செயல் அலுவலர் மீது துறைரீதியான ஒழுங்கு நடவடிக்கையினை மேற்கொண்டு, குற்றச்சாட்டுகளின் தன்மைக்கேற்ப, உரிய தண்டனை வழங்குமாறும் பேரூராட்சிகளின் ஆணையாளருக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2021ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 7–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

ஒம்/– x x x x
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்
திரு. A. ஜான் ஸ்டீபன்,
வீட்டு எண்.13–65, துத்திக்காலவிளை, பூவன்கோடு,
செங்கோடி அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்–629 177.

பேரூராட்சிகளின் ஆணையாளர், நகர் நிர்வாக அலுவலகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை, இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

இணை இயக்குநர் (பொது) மற்றும் ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம், நகர் நிர்வாக அலுவலகம்,
இராஜா அண்ணாமலைபுரம், சென்னை–600 028.

செயல் அலுவலர், வேர்கிளம்பி முதல்நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்

திரு.தை. சத்தியதாஸ், முன்னாள் செயல் அலுவலர்,
வேர்கிளம்பி பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்.
(செயல் அலுவலர், வேர்கிளம்பி பேரூராட்சி மூலமாக – தனியருக்கு ஆணையினை சார்பு செய்து அதற்கான ஒப்புகையை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பிவைக்க அறிவுறுத்தப்படுகிறார்)

**நகல்:**
மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.
இ.கோ/உதிரி

–/ஆணைப்படி/அனுப்பப்படுகிறது/–

10/12/21.
செயலாளர்
10.12.21